இஸ்லாமியக் கலாச்சாரதரத்தில் அரசாட்சியின் அடிப்படைகளும் விதிகளும்

1 சமூகத்தினருக்கு தங்களுக்கான ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் மற்றும் அவர்களைச் சீர்த்திருத்தும் உரிமை உண்டு

சமூகத்தினருக்குத் தங்களுடைய ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் அல்லது பைஃஅத்து செய்யும் உரிமையுண்டு. அத்துடன், ஆட்சியாளர் களுடைய ஆட்சி நடத்தும் முறை மற்றும் அவர்களுடைய செயல்பாடு களைக் கண்காணிக்கும் உரிமையும் உண்டு. ஆட்சியாளர் தவறான வழியினை மேற்கொண்டால், அவரை நேரான வழியினைக் காட்ட வும் அவர்களைச் சீர்த்திருத்தவும் இவர்களுக்கு உரிமையுண்டு. அறி வாற்றலும் உணர்வும் உள்ள வயது வந்த ஒவ்வொரு முஸ்லிமுக்கும் ஆட்சியாளரைத் தேர்ந்தெடுத்து பைஃஅத்து முறையில் அங்கீகரிக்கும் உரிமையுண்டு. ஆட்சியாளரைத் தேர்ந்தெடுப்பதில் முக்கியமான விஷ யம் என்னவெனில், சமூகத்தின் பெரும்பான்மையினர் நிர்வாக ஆற் றல் படைத்தவர்களைக்கொண்ட ஒரு குழுவினை நியமிக்கவேண்டும், இக்குழு மஜ்லிஸ் ஷூரா எனப்படும்.

ஒரு இஸ்லாமிய நாட்டின் ஆட்சியாளராக யாரோ ஒருவரை அனைவ ரும் சேர்ந்து ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்பது கட்டாய மானதல்ல. வரலாற்றின் மூலம் காணக்கிடைப்பது யாதெனில், அனைத்து முஸ்லிம்களும் சேர்ந்து ஒருமனதாக ஒரு ஆட்சியாளரைத் தேர்ந்தெடுத்துள்ளதாக எந்த ஆதாரமுமில்லை. உதாரணமாக, க்ஹுலஃபா ராஷிதீன்கள் எனப்படும் நேர்மையான க்ஹலீஃபாக்களை பைஃஅத்து முறையில் தேர்ந்தெடுத்தவர்கள் மதீனாவிலுள்ளவர்களும் மக்காஹ்வின் சில முஸ்லிம்களுமே என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு ஆட்சியாளருடைய தகுதியின்மை, ஒழுக்கக்கேடு ஆகியன நிரூபிக் கப்பட்டால் அவர் பதவி நீக்கம் செய்யப்படவேண்டும். ஆனால், அதற்கு முன்பாக, உம்மத்தினரில் நேர்மையானவர்கள் மற்றும் அறிஞர்களில் சிலர், அவர் மீண்டும் தவறான வழிமுறையிலிருந்து விலகி திருந்திவிடும்படியான வகையில் பல்வேறு வகைகளில் அறி வுரை மற்றும் சீர்த்திருத்த முறைகளை மேற்கொள்ளவேண்டும். அவர் உண்மையின் அடிப்படையிலான அறிவுரைகளை ஏற்று மீண்டும் நேர்மையைக் கடைபிடிப்பாரேயானால், அவரைப் பதவி நீக்கம் செய்வது சரியானதல்ல. மாறாக, அவர் அறிஞர்கள் மற்றும் அறிவுரை வழங்குவோருடைய அலோசனைகளுக்குச் செவிசாய்க்காது, முஸ் லிம்களுடைய நலனைக் காக்கும் பொறுப்பினையும் கருத்தில் கொள்

www.uzairalahi.com

ளாது முஸ்லிம்களின் கண்ணியம் மற்றும் பாதுகாப்பிற்கான எந்த ஏற்பாடும் செய்யாது நிலைத்திருப்பாரேயானால், அவரை பதவி நீக்கம் செய்யலாம். இருப்பினும், இதில் ஒன்று கவனிக்கவேண்டியிருக்கின்றது, அதாவது, நேர்மையை நிலைநாட்டுவதைவிட குழப்பம் மற்றும் சீர்கேடு ஏற்படுத்தாமலிருக்கும வகையில் மக்கள் அவருடைய பதவியைப் பறிக்கும் ஆற்றல் மற்றும் சக்தி பெற்றிருக்க வேண்டும். ஆட்சியாளரை நீக்குவதில் பெருமளவிலான இன்னல் மற்றும் அழிவுக்கான அச்சம் இருக்குமானால், அந்த ஆட்சியாளரின் கொடுமை மற்றும் அநீதிகளைப் பொறுத்துக்கொண்டு காத்திருப்பது நல்லது.

2 ஷூரா

ஷூரா முறை இஸ்லாமிய ஆட்சியின் ஒரு முக்கியமான அடிப்படை அம்சமாகும். அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

وَشَاوِرْهُمْ فِي الْأَمْرِ ﴿١٥٩﴾ آل عمران : 59)

பொருள்: மேலும், தீனுடைய பணிகளில் இவர்களையும் கலந்தாலோசிப்பீராக (ஆலு இம்ரான்:159).

அல்லாஹ் தஅலா மற்றொரு இடத்தில் கூறுகின்றான்:

وَأَمْرُهُمْ شُورَىٰ بَيْنَهُمْ ﴿٣٨﴾ الشورى 38)

பொருள்: மேலும், அவர்கள் தங்களின் காரியங்களை பரஸ்பரம் ஆலோசனை செய்து நடத்துகின்றார்கள் (அஷ்ஷூரா:38).

இறைத்தூதர் ﷺ அவர்கள் தங்கள் நபித்தோழர்களுடன் மிக அதிகமாகவே ஆலோசனை கலந்துகொள்வார்கள். இதனைப்போன்றே, அவர்களுக்குப் ﷺ பின்பும் நேர்மையானக்ஹலீஃபாக்களும் மார்க்க அறிஞர்கள் மற்றும் அனுபவமுள்ளவர்களிடம் அனைத்து விஷயங்களிலும் ஆலோசனைகலப்பது வழக்கமாக இருந்தது. உதாரணமாக, ஒருபடைத் தலைவரை நியமிப்பது, படைகளை அனுப்பிவைப்பது மற்றும் படைப் பொருட்களைப் பங்கீடு செய்வது ஆகிய விஷயங்களில், அவர்கள் எந்த விஷயங்களைப்பற்றி ஃகுர்ஆன் மற்றும் நபிமொழிகளில் தெளிவான முறையில் சட்டம் அல்லது விதிமுறை கூறப்படவில்லையோ, அந்த வியஷயங்களில், மார்க்கச்சட்ட அறிஞர்களிடம் கேட்டறிந்து

www.uzairalahi.com

கொள்வார்கள். ஹஜ்ரத் அபூ பக்ர் (ர) அவர்கள் ஒரு குழுவினை நிய மித்திருந்தார்கள், அவர்களுக்கு முன்பாக எந்த விஷயங்களில் திருக் ஃகுர்ஆன் வசனமோ அல்லது ஸஹீஹான நபிமொழி அல்லது சுன்னத்து பெறப்படவில்லையோ, அவ்விஷயங்களை முன்வைத்து அதற்கான தீர்வு காண்பார்கள். ஹஜ்தரத் உமர் (ர) அவர்கள் மாபெ ரும் நபித்தோழர்கள் மதீனாவைவிட்டு வெளியே செல்வதிலிருந்து தடுப்பார்கள், காரணம், தேவைப்படும்போது அவர்களிடம் ஆலோ சனை கலக்க வேண்டியிருக்கும் என்னபதற்காக.

எந்த விஷயங்களைப்பற்றி திருக்ஃகுர்ஆன் மற்றும் நபிமொழிகளில் தெளிவான ஆதாரங்களும் கட்டளைகளும் உள்ளனவோ, அவற்றைப் பற்றி ஆலோசனை கலப்பது கூடாது. இம்மாதிரியான விஷயங்களில் ஷூராவிற்கு எந்த ஒரு தலையீடுமில்லை. இறைத்தூதர் ﷺ அவர்கள் எந்த விஷயத்தைப்பற்றி திருக்ஃர்ஆன் வசனம் அருளப்பட்டுள்ளதோ அல்லது எதனைப் பற்றி விளக்கம் அளிக்கப்படும் வகையில் வஹி இறங்கியுள்ளதோ, அதனைப்பற்றி அவர்கள் யாருடனும் கலந்தாலே சிக்க முற்படுவதில்லை. ஷூரா எனப்படும் ஆலோசனை கலப்பது இரண்டு விஷயங்களில் மட்டுமே மேற்கொள்ளப்படும்.

1 தன்னுடைய பொறுப்பினை நல்ல முறையில் நிறைவேற்றும் ஆற்றலுடைய ஒரு ஆட்சியாளரை நியமித்தல், அல்லாஹ்வினால் அருளப்பட்ட திருக்ஃகுர்ஆன் மற்றும் இறைத்தூதர் ﷺ அவர்களு டைய சுன்னத்தான முறையினைப் பின்பற்றவேண்டும் என்று பைஃஅத்து செய்தல். இவ்வகையில், பைஃஅத்து நிறைவேறி விடுமானால், எவ்வகையான கட்டாயத்திற்கும் ஆளாகாமல் அவரைக் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளுதல்.

2 ஆட்சியாளர் தன்னிச்கையாகச் செயல்படுபவராக இருக்கக் கூடாது. ஒவ்வொரு முஸ்லிமுக்கும் சுதந்திரமாகவும் வலுவான முறையிலும் ஆட்சி முறையினைப்பற்றி தன்னுடைய கருத்தினை எடுத்துக்கூறும் உரிமை உண்டு. ஆட்சியாளர் இதனைச் செவி சாய்த்து, அது சரியானதாகவும் பொருத்தமானதாகவும் இருக்கு மானால், அதனைக் கொண்டு பயன்பெறுவது கட்டாயமானதா கும். பொதுமக்கள் தங்களுடைய கருத்தினைக்கூறும் உரிமை பெற் றிருந்தாலும், ஆட்சியாளர் மிகவும் முக்கியமான விஷயங்களி லெல்லாம் பொதுமக்களுடன் ஆலோசனை கலக்கவேண்டியது கட்டாயமான ஒன்றல்ல. ஏனெனில், அவர்கள் எதிர்கொண்டி ருக்கும் ஒரு பிரச்சினையைப்பற்றி சரியான அணுகுமுறையும் அனுபவமும் பெறாமலிருக்கலாம். மாறாக, ஆட்சியாளர், அறி

www.uzairfaizi.com

வாற்றலும் அனுபவமுமுள்ள, ஆலோசனை வழங்கும் தகுதியும் பெற்றுள்ளமூத்தவர்களுடன்ஆலோசனைகலக்கவேண்டும். உதாரணமாக, கல்வியறிவு, மனத்தூய்மை, பக்குவமும் நயமும், திட்டங்களைவகுக்கும் மற்றும்கையாளும் அனுபவம்மற்றும் சீரான சிந்தனையின் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றிருப்பவர்கள், சிந்தனையும் ஆற்றலும் மிக்கவர்கள். அதாவது, அமீர்கள், ஆட்சியாளர்கள், அறிஞர்கள், படைத்தலைவர்கள்மற்றும்பொதுமக்கள் தங்களுடைய தேவைகளுக்கும் பொதுவான பணிகளுக்காகவும் தொடர்புகொண்டு தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் பல்வேறுதுறைகளின்தலைவர்கள் ஆகியோராவர்

இஸ்லாம் கலந்தாலோசிக்கும் முறையை வெகுவாகவே ஊக்குவிக்கின்றது. ஏனெனில், சமூகம் மற்றும் தனிமனிதருடைய வாழ்க்கையின் பெரும்பாலாலான விஷயங்களில் இதன் மூலம் நல்ல தீர்வுகள் பெறப்படுகின்றன.

அவற்றுள் சில கீழ்வருமாறு:

1 இது ஒரு தனிமனிதருடைய கண்ணியம் மற்றும்சமுதாய நலனைக் கருதியும் ஒருவருடைய தனித்தன்மையினை அங்கீகரிக்கும் வகையிலும் இஸ்லாம் வகுத்துத் தந்துள்ள சட்டங்கள் மற்றும் விதிகளுக்கேற்பவும் அமைந்துள்ளது.

2 இது கலந்தாலோசித்து செயல்படவேண்டிய பல்வேறு விஷயங்களில் அதற்கான பொருத்தமான, முடிவான கருத்தினை எட்டுவதற்கான பாதுகாப்பான ஒரு வழியாகும். ஷூரா எனப்படும் கலந்தாலோசிக்கும் முறையில் ஆட்சியாளர் மற்றும் குடிமக்களுடைய உணர்வுகள் மற்றும் உரிமைகள் ஆகியன கண்ணியமான முறையில் கையாளப்படுகின்றன. ஏனெனில், அவர்களும் ஆட்சியில் பங்குபெறுகின்றனர்.

3 இம்முறையில், பொதுமக்களுடைய உரிமமைகள் பாதுகாக்கப்படுகின்றன. இது ஆட்சியாளர்களுடைய அணுகுமுறைகளையும் சீர்த்திருத்துகின்றது மற்றும் ஆட்சியதிகாரத்தின் விஷயங்களில் அவற்றை உறுதிப்படுத்துவது மற்றும்சீரானமுறையில் கையாளப்படுவதற்கான உத்திரவாதம் அளிக்கும் வகையிலும் அமைகின்றது.

www.uzairalahi.com

இது இஸ்லாமிய ஷூரா எனப்படும் கலந்தாலோசித்துச் செயல்படும் முறையாகும் மற்றும், இதுவே, உண்மையில் ஒவ்வொரு மனிதரும் எவ்வித அச்சமும் இன்றி தன்னுடைய கருத்தினை எடுத்துக்கூறும் சுதந்திரத்தினை அளிக்கும் கலாந்தாலோசனை முறையுமயாகும்.

3 நீதி

இஸ்லாம் நீதி மற்றும் நியாயம் வழங்குமாறு கட்டளையிடுகின்றது மற்றும் இதனை இஸ்லாமிய ஆட்சியின் குறிக்கோளாகவும் கருதுகின்றது. நீதி என்றால், ஒவ்வொரு மனிதருக்கும் எவ்விதக் குறைவுமின்றி முழுமையான உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்பதாகும். இது ஆட்சியாளர்களின் பொறுப்பு மற்றும் அவர்கள் பதில்கூறும் வகையிலானதாகும். அவர்கள் எந்த ஒருவர்மீதும் அநிதியிழைப்பார்களேயானால், உம்மத்தினர் ஆட்சியாளர்களைக் காண்காணிக்கும் உரிமையும் பெறுகின்றனர். நீதி வழங்குவதில் முஸ்லிம் முஸ்லிமல்லாதவர் என்ற பாகுபாடின்றி அனைவருக்கும் அனைத்து உரிமைகளையும், உதாரணமாக, அவர்களுடைய உயிர், பொருள், கண்ணியம் மற்றும் சுதந்திரம் ஆகிய அனைத்து உரிமைகளையும் உள்ளடக்கியதாக உள்ளது.

திருக்ஃகுர்ஆனில் அருளப்பட்ட பெரும்பாலான வசனங்கள் நீதி நிலைநாட்டுமாறு மிகத்தெளிவாகவே வழிகாட்டுவதோடு வலியுறுத்தவும் செய்கின்றன மற்றும் அநீதி மற்றும் அதன் தீய விளைவுகளைப்பற்றியும் அச்சுறுத்துகின்றன. அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

إِنَّ ٱللَّهَ يَأۡمُرُ بِٱلۡعَدۡلِ وَٱلۡإِحۡسَٰنِ وَإِيتَآيِٕ ذِي ٱلۡقُرۡبَىٰ وَيَنۡهَىٰ عَنِ ٱلۡفَحۡشَآءِ وَٱلۡمُنكَرِ
وَٱلۡبَغۡيِۚ يَعِظُكُمۡ لَعَلَّكُمۡ تَذَكَّرُونَ ٩٠ النحل 0)

பொருள்: *திண்ணமாக, அல்லாஹ் நீதி செலுத்தும்படியும் நன்மை செய்யும்படியும் உறவினர்களுக்கு ஈந்துதவும்படியும்கட்டளையிடுகின்றான். மேலும், மானக்கேடான, வெறுக்கத்தக்க மற்றும் அக்கிரமமான செயல்களை விலக்குகின்றான். நீங்கள் படிப்பினை பெறும்பொருட்டு உங்களுக்கு அறிவுரை கூறுகின்றான் (அந் நுஹ்ல்:90)*

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகின்றார்கள்:

اتَّقُوْا الظُّلْمَ، فَإِنَّ الظُّلْمَ ظُلُمَاتٌ يَوْمَ الْقِيَامَةِ مسلم)

பொருள்: *அநீதி மற்றும் கொடுமையைவிட்டு விலகியிருங்கள், ஏனெனில், அநீதியாளர்களுக்கு மறுமை நாளில் இருள்கள் சூழ்ந்திருக்கும்* (முஸ்லிம்)

www.bzairfalahi.com

நீதி என்பது சட்டம் அனைவருக்கும் பொதுவானது, சரிசமமானது என்ப தாகும். எந்த ஒரு மரியாதைக்குரியவர் மற்றும் சாமானியர்களுக்கிடையி லும், செல்வந்தர் மற்றும் எழைகளுக்கிடையிலும் எவ்வித வித்தியாசமும் காட்டப்படக்கூடாது என்பதாகும். அனைவரும் இந்த நீதி நிலைநாட்டும் விஷயத்தில் சட்டங்களுக்குட்பட்டவர்கள். இவ்வகையில், நீதி ஒரு ஆட்சி நிலைத்திருப்பதற்கும் அதன் பாதுகாப்பிற்கும் உறுதியான அடிப்படை யாக அமைகின்றது. இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ் தஆலா நீதியை நிலைநாட்டும் ஆட்சியினை நிலைத்திருக்கச் செய்கின்றான், அது இறைமறுப்பாளர்களுடைய ஆட்சியாக இருப்பினும் சரியே, மற்றும் அநீதியாளரான ஒரு ஆட்சியாளர் ஆட்சியினைத் தாமே முடிவு கட்டிவிடுகின்றான், அவன் ஒரு முஸ்லிமாக இருந்தாலும் சரியே.

நீதி நிலைநாட்டப்படுவதற்கு, அதனைப் பாதுகாப்பதற்காக ஒரு ஆற்றல் மிக்க சக்தி தேவைப்படுகின்றது. அங்கு நீதியின் அடிப்படையிலான ஆட்சி பதவியில் இருக்கவேண்டும், நீதி யாருடைய ஆதிக்கத்திற்கும் கட்டுப் பட்டு இருக்கக்கூடாது. ஆகவேதான், ஹஜ்ரத் உமர் பின் க்ஹத்தாப் (ர) அவர்கள் நீதியை நிலைநாட்டும் நீதிபதிகளான ஃகாஜ்திகளுக்கு, அனைத் துவித பதவிகள் மற்றும் பொறுப்புகளிலிருந்து தனிமைப்பபடுத்திவிட்டார் கள். இதுவும் இஸ்லாமிய அடிப்படையிலான ஆட்சியின் ஒரு அடிப்படை அம்சமாகும். ஹஜ்ரத் உமர் பின் க்ஹத்தாப் (ர) அவர்கள் க்ஹலீஃபாவாக நியமிக்கப்பட்டபின் இஸ்லாமிய ஆட்சி அனைத்து திசை களிலும் பரவிவிட்ட நிலையில், ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் ஒரு ஃகாஜ்தியை நியமித்தார்கள், நீதித்துறையை சீரமைத்தார்கள் மற்றும் அதனை மற்ற நீதிமன்றங்களிலிருந்தும் தனித்தனியாகப் பிரித்தும் விட் டார்கள்.

நீதி நிலைநாட்டப்படுவது நிச்சயம் ஒரு குடிமகனுடைய மனதில் அவ னுடைய உயிர், பொருள், கண்ணியம் மற்றும் சுதந்திரம் ஆகிய அனைத்து உரிமைகள் வழங்கப்பட்டுள்ளது பற்றியும் பாதுகாப்பின் உணர்வினையும் ஏற்படுத்துகின்றது. நீதி நிலைநாட்டப்படுவதன் காரணமாக குற்றங்கள் குறைந்துவிடுகின்றன, ஒவ்வொரு மனிதரும் தன்னுடைய தொழில் மற் றும் பணியில் மூழ்கியிருப்பார் மற்றும் சமூகத்தின் வளர்ச்சி மற்றும் மேன் மையில் பங்களிப்பார். நீதியின் காரணமாக, ஒரு மனிதன் தன்னுடைய பணி மற்றும் உழைப்புக்கான பிரதிபலனை அடைகின்றான் மற்றும் நன் மையான செயல்களில் முன்னேறுவதற்கும் முயற்சி செய்கின்றான். நீதி நிலைநாட்டப்படுவதன் காரணமாக சமத்துவமும் அனைவரும் சமம் என்ற நிலையும் உருவாகின்றது. மக்கள் தத்தம் முயற்சிகள் மற்றும் தகுதிகளுக் கேற்ப முன்னேற்றப்பாதையில் சென்றுகொண்டிருப்பார்கள். இஸ்லாம் மக்களுடைய வாழ்க்கையில் நீதியை நிலைநாட்டி ஒரு மிகவும் சிறப்பு மிக்க உன்னதமான முன்மாதிரியை உலகுக்கு அளித்துள்ளது.

www.uzaitabi.com

4 ஆட்சியாளர்களுக்குக் கீழ்ப்படிதல்

ஆட்சியாளர்களுக்குக் கீழ்ப்படிவது இஸ்லாமிய அட்சியின் அடிப்படைகளில் மிகவும் முக்கியமான ஒரு அடிப்படையாகும். ஒரு ஆட்சியாளருக்கு எதுவரை அவர் அல்லாஹ் கடமையாக்கிய சட்டங்களைப் பின்பற்றி நடப்பாரோ மற்றும் தடுக்கப்பட்டவைகளைச் செய்யுமாறு கட்டளையிடாத வரை அவருக்குக் கீழ்ப்படியவேண்டும். அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ أَطِيعُواْ ٱللَّهَ وَأَطِيعُواْ ٱلرَّسُولَ وَأُوْلِي ٱلۡأَمۡرِ مِنكُمۡۖ ٥٩ النساء 59)

பொருள்: *நம்பிக்கை கொண்டவர்களே, அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படியுங்கள், அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படியுங்கள், மேலும், உங்களில் அதிகாரம் உடையவர்களுக்கும் கீழ்ப்படியுங்கள்* (அந் நிசா:59)

ஒரு ஆட்சியாளருக்குக் கீழ்ப்படிவது மற்றும் அவர்கள் கூறுவதைக் கேட்டு நடப்பது, ஒரு பாவமான செயலைச் செய்வதற்கான கட்டளையாக இருந்தாலன்றி, ஒரு முஸ்லிம்மீது கட்டாயமானதாகும், அது அவருக்குப் பிடித்ததாகவோ அல்லது பிடிக்காத ஒன்றாகவோ இருப்பினும் சரியே. ஆட்சியாளர் ஒரு பாவமான செயலைச் செய்யக் கட்டளையிடுவாரேயானால் அதனைச் செய்வது கட்டாயமானதல்ல. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

السَّمْعُ وَالطَّاعَةُ عَلَى المَرْءِ المُسْلِمِ فِيمَا أَحَبَّ وَكَرِهَ، مَا لَمْ يُؤْمَرْ بِمَعْصِيَةٍ، فَإِذَا أُمِرَ بِمَعْصِيَةٍ فَلاَ سَمْعَ وَلاَ طَاعَةَ البخاري، مسلم)

பொருள்: *ஒரு ஆட்சியாளருக்குக் கீழ்ப்படிவது மற்றும் அவர்கள் கூறுவதைக் கேட்டு நடப்பது, ஒரு பாவமான செயலைச் செய்வதற்கான கட்டளையாக இருந்தாலன்றி, ஒரு முஸ்லிம்மீது கட்டாயமானதாகும், அது அவருக்குப் பிடித்ததாகவோ அல்லது பிடிக்காத ஒன்றாகவோ இருப்பினும் சரியே. ஒரு பாவமான செயலைச் செய்யுமாறு கட்டளையிடப்பட்டால் அதனைச் கேட்கவும் தேவையில்லை, அவருக்குக் கீழ்ப்படியவும் தேவையில்லை.* (பிக்ஹாரி, முஸ்லிம்).

5 தனிமனிதர் சுதந்திரம்

இஸ்லாம் தனிமனிதனுடைய சுதந்திரத்தைப்பற்றி கவனம் செலுத்தியுள்ளதோடு அவனை எந்த ஒரு தத்துவத்தைப் பின்பற்றவேண்டும் அல்லது ஒரு கொள்கைக்கேற்ப தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவேண்டும் என்றும் கட்டாயப்படுத்தவில்லை. மாறாக, இஸ்லாமிய ஆட்சியில்

www.uzairfadhi.com

ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் தாமாகவே சிந்தித்து தனக்காக ஒரு வாழ்க்கைமுறையினைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளவும் தன்னுடைய கருத்தினை எடுத்துரைக்கவும் முழு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மற்றவர்களுடைய தனிமனிதர் சுதந்திரம் இதன் காரணமாக எவ்விதத் தாக்கத்திற்கும் ஆளாக்கப்படக்கூடாது என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது.

ஒரு இஸ்லாமிய நாட்டில் மார்க்கக் கொள்கை விஷயத்தில் அனைத்துக் குடிமக்களுக்கும் அவர்கள் எந்த ஒரு மார்க்கக் கொள்கையையும் ஏற்று நடக்கலாம் என்ற சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வகையில், ஒரு இஸ்லாமிய நாட்டில் வாழும் வேதமளிக்கப்பட்ட மக்களுக்கு தங்களுடைய மார்க்கக் கோட்பாடுகளைப் பின்பற்றி நடக்கும் உரிமையுண்டு, அவர்களை யாரும் தடுக்க முடியாது. அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

لَآ إِكۡرَاهَ فِي ٱلدِّينِۖ ﴿٢٥٦﴾ البقر 256)

பொருள்: *தீனில் (இறைநெறியை மேற்கொள்வதில்) யாதொரு கட்டாயமோ, நிர்ப்பந்தமோ இல்லை (அல் பஃகரா:256).* அல்லாஹ் தஆலா மற்றொரு இடத்தில் கூறுகின்றான்:

أَفَأَنتَ تُكۡرِهُ ٱلنَّاسَ حَتَّىٰ يَكُونُواْ مُؤۡمِنِينَ ﴿٩٩﴾ يونس 99)

பொருள்: *அப்படியிருக்க, மக்கள் நம்பிக்கையாளர்களாகிவிட வேண்டுமென்று நீர் அவர்களைக் கட்டாயப்படுத்துவீரா?* (யூனுஸ்:99).

வரலாற்றில் முக்கியமான ஒரு நிகழ்வு உண்டு, ஹஜ்ரத் ஃஅம்ர் பின் ஃஆஸ் (ர) அவர்களுடைய மகன் எகிப்தியப் பண்டைய எகிப்திய வம்சத்தைச் சேர்ந்த ஒரு வாலிபருடன் போட்டியிட்டார், அதில் எகிப்திய வாலிபர் முந்தி விட்டார். இதனால் உணர்ச்சிவசப்பட்ட ஹஜ்ரத் ஃஅம்ர் பின் ஃஆஸ் (ர) அவர்களுடைய மகன் அவரை அடித்துவிட்டார். அதன்பின் அந்த எகிப்திய வாலிபர் முஸ்லிம்களுடைய ஃகலிஃபாவான ஹஜ்ரத் உமர் (ர) அவர் களிடம் சென்று முறையிட்டார். இதன் காரணமாக, அவர்கள் (ர), ஹஜ்ரத் ஃஅம்ர் பின் ஃஆஸ் (ர) மற்றும் அவர்களுடைய மகனை அழைத்தார்கள். அந்த எகிப்திய வாலிபரை ஹஜ்ரத் ஃஅம்ர் பின் ஃஆஸ் (ர) அவர்களுடைய மகனை அவருடைய தந்தையின் கண் முன்னால் அடித்துப் பழிதீர்த்துக் கொள்ளுமாறு கட்டளையிட்டார்கள். அத்துடன், ஹஜ்ரத் ஃஅம்ர் பின் ஃஆஸ் (ர) அவர்களைப்பார்த்து, நீங்கள் மக்களை எப்போதிலிருந்து அடிமைகளாக்கிக்கொண்டீர்கள், அவர்களுடைய தாய்கள்

www.uzairfalahi.com

அவர்களை சுதந்திரமானவர்களாகத்தானே பெற்றெடுத்திருந்தார்கள் என்று கேட்டார்கள். இஸ்லாம் இதனைத்தவிர பல்வேறு விஷயங்களிலும் சுதந்திரமளித்துள்ளது, உதாரணமாக, குடியுரிமைக்கான சுதந்திரம். அங்கே மனிதர்கள் உடன்படிக்கைகள் செய்துகொள்ளும், பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளும் உரிமையில் சுதந்திரமாகச் செயல்படலாம். குழந்தைகள் மற்றும் மனநிலை குன்றியவர்களைத் தவிர, ஒவ்வொரு மனிதருக்கும் சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றுள், அரசியல் சார்ந்த சுதந்திரம், சிந்தனை மற்றும் கொள்கைகளில் சுதந்திரம் ஆகியவை அடங்கும். இந்த சுதந்திரம் என்பது இஸ்லாமிய அடிப்படைகள் மற்றும் அடிப்படை விதிகளுடன் முரண்பாடு கொள்ளக்கூடாது மற்றும் மற்ற எவருடைய சுதந்திரத்திற்கும் பாதகம் ஏற்படுத்தக்கூடாது என்பது அதற்கான நிபந்தனையாகும்.

* * *

www.uzairfalahi.com